padippakam



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை


## பகுதி II

15

டி.எஸ் சேன நாயக்கா திட்டமிட்டு தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கிக் கொண்டிருந்த நேரத்தில், தமிழர்களுடைய தலைவர்கள் தங்களையும் மந்திரி சபையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கோரி, பிரித்தானிய ஆள்பதிக்கு மனுவுக்கு மேல் மனு எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

தங்களுடைய பாரம்பரியப் பிரதேசம் பறிபோகிறதே; தமிழினத்தின் எதிர்காலம் சிதைக்கப்படுகின்றதே என்கிற கவலையெல்லாம் அவர்களுக்கு உருவாகவில்லை. கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் இருந்த தங்கள் சொத்துக்களுக்கு அபாயம் உண்டாகும் விதத்தில் தங்களது அரசியல் நடவடிக்கைகள் அமைந்துவிடக் கூடாது என்பதில் அவர்கள் கவனமாக இருந்தார்கள்.

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற எண்ணமே அவர்களுக்கு இல்லாமல் இருந்தது. பெரும்பாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டையே மையமாகக் கொண்டிருந்த அக்காலத் தலைவர்கள் தமிழ் மக்களை சாதி ரீதியாக மட்டுமல்லாது, மட்டக்களப்பு, வன்னி என்று பிரதேச ரீதியாகவும் பிரித்து வைத்திருந்தார்கள்.



அக் காலத்தில் யாழ்ப்பாண மேட்டுக்குடியினருக்கு தங்களுக்கு கீழுள்ள சாதியினர் எவ்வளவுக்கு இழிவானவர்களாகத் தெரிந்தார்களோ அவ்வாறே வன்னி மக்களும், கிழக்கு மாகாண மக்களும் கூட இழிவானவர்களாக இருந்தார்கள்.

வன்னியையும், கிழக்கு மாகாணத்தையும் பொறுத்தவரை, யாழ்ப்பாணத்தில் இருந்த அளவுக்கு பாரிய சாதிய முரண்பாடுகள் இருக்கவில்லை. வன்னிப் பிரதேசத்தில் யாழ்ப்பாணம் மற்றும் தமிழகத் தொடர்புகளால் ஓரளவுக்கு 'சாதி' அமைப்பின் அழுத்தம் இருந்தாலும், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேசத்தில் அது மிக மிகக் குறைவாகவே இருந்தது.

தமிழர்களுக்கு மத்தியில் இருந்த சாதிய பிரதேச வேறுபாடுகளை நன்கு தெரிந்து வைத்திருந்த ஆங்கிலேய அரசு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை கிழக்கு மாகாணத்துக்கோ வன்னிப் பகுதிக்கோ கொடுக்கவில்லை.

கிழக்கு மாகாண மக்களுக்கு சாதி மத பேதமின்றி கல்வியறிவூட்டிய பெருமை 'விபுலானந்த அடிகள்' எனும் துறவறப் பெயர் பூண்ட பண்டிதர் மயில்வாகனனாரையே சாரும். 1929-ல் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இராமகிருஷ்ண மிசன் பாடசாலைகளை அமைத்த அவர், தமிழ் பிள்ளைகள் அனைவரையும் என்னசாதி, என்ன மதம் என்று எதுவுமே பார்க்காது சேர்த்துக் கொண்டார்.

**விபுலானந்த அடிகள் எனும் துறவறப் பெயர் பூண்ட பண்டிதர் மயில்வாகனனார் 1929—ல் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இராமகிருஷ்ண மிசன் பாடசாலைகளை அமைத்து, தமிழ் பிள்ளைகள் அனைவரையும் என்னசாதி, என்ன மதம் என்று எதுவுமே பார்க்காது சேர்த்துக் கொண்டார்.**

## சுவாமி விபுலானந்தரின் கல்விப் பணி

'கல்வி என்பது எல்லோருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். அது ஒரு சிலருக்கு மட்டும் சொந்தமாக இருந்தால் அது கல்வித் தத்துவத்துக்கே முரணானது. அதனால் தமிழ் சமூகத்திற்கு எந்த விமோசனமும் கிடைக்காது' என்பதை விபுலானந்த அடிகள் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.

யாழ்ப்பாணத்தில் கிறிஸ்தவப் பாடசாலைகளுக்குப் போட்டியாக நிறுவப்பட்ட இந்துப் பாடசாலைகள் எல்லாம் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகள் கல்வி கற்க அனுமதி மறுத்த போது இராமகிருஷ்ண மிசனரியால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாசாலை, அக் காலத்தில் எந்த வித பாகுபாடுமின்றி அனைவரையும் சமமாக மதித்து கல்வி கற்க அனுமதித்தது ஒரு முற்போக்கான நடவடிக்கையாக இருந்தது.

பொதுவாக அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் கரையோரப் பகுதிகளிலிருந்த கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலைகளும், யாழ்ப்பாண நகரத்திலிருந்த சென் யோன்ஸ் கல்லூரி, சென் பற்றிக்ஸ் கல்லூரி, மத்திய கல்லூரி என்பனவும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு அனுமதியளிக்க முன் வந்திருந்தன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் உயர் கல்வி கற்பதற்காக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த எஸ். ஆர். ஜேக்கப் என்ற மாணவனை, அப்போது அக் கல்லூரியின் அதிபராக இருந்த 'பிக்னல்' என்ற ஆங்கிலப் பாதிரியார் அனுமதித்தபோது, தங்கள் பிள்ளைகளை அந்தப் பாடசாலைக்கு கல்வி கற்க அனுப்பமாட்டோம் என்று மேட்டுக் குடியினர் போர்க் கொடி தூக்கினர்.

'யார் கல்லூரியை விட்டு வெளியேறினாலும், யார் கல்லூரிக்கு வந்தாலும் வராவிட்டாலும் ஜேக்கப் என்ற இந்த மாணவனுக்காக இந்தக் கல்லூரியை நான் தொடர்ந்து நடத்துவேன்' என்று பிக்னல் பாதிரியார் உறுதியாகக் கூறிவிட்டார். இது பற்றி அவர் எழுதிய குறிப்புகள் இன்றும் அக்கல்லூரி நூலகத்தில் உண்டு.

தமிழ் மக்களின் தலைவர் என்று சொல்லிக்கொண்ட சேர். பொன். இராமநாதன், யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்ற இரண்டு கல்லூரிகளை நிறுவி, தமிழ் மாணவர்களின் கல்விக்கு வழி காட்டியதாகச் சொல்லப்பட்டாலும், இவர் தனது பாடசாலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கு அனுமதி மறுத்தது மட்டுமல்லாமல், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அவர்களது பிள்ளைகள் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தது இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ரஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து சோசலிசச் சிந்தனைகளும் வர்க்கப் போராட்டம் பற்றிய எண்ணமும் இலங்கையிலும் பரவ ஆரம்பித்தது. லண்டனில் பல்கலைக்கழகக் கல்வி கற்ற என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி. சில்வா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க, லெஸ்லி. குணவர்த்தனா, பிலிப் குணவர்த்தனா போன்ற சிங்களத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து 1935-ல் லங்கா சமசமாஜக் கட்சியை உருவாக்கினார்கள். இவர்கள் உண்மையான புரட்சிகர மாக்சிஸ்டுகளாக இல்லையென்றாலும், ஓரளவுக்கு இடதுசாரிச் சிந்தனை உடையவர்களாக இருந்தார்கள்.

தேசிய விடுதலையை அடைதல், ஏகாதிபத்தியத்தை தோற்கடித்தல், சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஒழித்தல் என்பன சமசமாஜக் கட்சியின் கொள்கைகளாக இருந்தன.

பிரித்தானிய தொழிற்கட்சியின் பாணியில் அமைக்கப்பட்டிருந்த சமசமாஜக் கட்சி அடக்குமுறைக் கருவியான அரசை தூக்கியெறிவதற்கு ஆயுதப் போராட்டத்தை முன்னெடுப்பதற்குப் பதில் பாராளுமன்றப் பாதையையும், வாக்குச் சீட்டையுமே நம்பியதாலும் திரொக்கிச, ஸ்டாலிச தத்துவார்த்த மோதல்களாலும் விரைவிலேயே பிளவு பட்டுப்போனது. 1943-ம் ஆண்டு சமசமாஜக் கட்சியிலிருந்து விலகிய இடதுசாரித் தலைவர்கள் ஒன்று சேர்ந்து இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கினார்கள்.

**பொன். இராமநாதன், யாழ்ப்பாணத்தில் பரமேஸ்வராக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி என்ற இரண்டு கல்லூரிகளை நிறுவினாலும், தனது பாடசாலைகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்கு அனுமதி மறுத்தது மட்டுமல்லாமல், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அவர்களது பிள்ளைகள் ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தது இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.**

இக் கட்சியில் நா. சண்முகதாசன், அ. வைத்திலிங்கம். பொன். கந்தையா, மு. கார்த்திகேயன் போன்ற தமிழர்களும் முழுமூச்சாக பங்கெடுத்துக் கொண்டனர்.

அரசியல் என்பது எப்போதுமே யாழ்ப்பாண மேட்டுக் குடியினருக்கு மட்டுமே உரித்தான தனிச் சொத்து என்றிருந்த நிலைப்பாடு, பொன்.கந்தையா, நா.சண்முகதாசன் ஆகியோரது அரசியல் நடவடிக்கைகளால் மாற்றி அமைக்கப்பட்டது.

பாமரர்களும், அரசியலில் பங்கெடுக்க வேண்டும், அரசியலறிவு பெறவேண்டும், ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கெதிரான அடிமைத் தளைகளை அறுப்பதற்கும் ஒன்று திரண்டு போராடுவதற்கும் முன்வர வேண்டும் என்று அவர்களுக்கு உணர்த்தும் வகையில் இலங்கைக் கம்யூனிசக் கட்சியின் அக்கால வேலைத் திட்டங்கள் இருந்தன.

ஏகாதிபத்திய எதிர்ப்பு, உள்நாட்டு முதலாளித்துவ எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ சக்திகளுக்கான எதிர்ப்பு என்பன அன்றைய கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளாக இருந்தன.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்த மிகக் கடுமையான சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், சமபந்தி போசனம் முதலான நடவடிக்கைகள், யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசினால் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. மகாத்மா காந்தியின் யாழ்ப்பாண வருகையோடு இவை தீவிரமடைந்திருந்தன. ஆனால், அகிம்சை வழியில் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கைகள், சாதி அமைப்பைத் தகர்ப்பதற்குப் பதில் அதை அப்படியே தக்க வைத்துக் கொண்டு, சில சலுகைகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளாகவே இருந்தன.

காலாகாலமாக கொத்தடிமைகளாக வாழ்ந்துவிட்ட மக்கள் அகிம்சை வழியில் உரிமை கேட்டபோது, ஆயுதத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள்.

உரிமைகள் ஒருபோதும் இரந்து பெறுவதல்ல; போராடிப் பெறுவதே. சாதி வெறியர்களால் அடக்குமுறைக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டும் என்ற கொள்கையை முன்வைத்த கம்யூனிஸ்ட் கட்சி, அதற்கான முயற்சிகளிலும் இறங்கியது.

- நக்கீரன்

படிப்பகம்